**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

இயேசு அவரிடம்: "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமல் நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார்

(யோவான் 20: 29)

எருசலத்தில் வாழ்ந்த தொடக்கால கிறிஸ்துவச் சமூகத்தின் பண்பு-நலன்கள் பற்றி புனித லூக்கா குறிப்படுகிறார். ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பின், திருத்தூதர்களோடு மக்கள் வாழ்ந்த வாழ்க்கை, அருளின் காலம். அவர்கள் அப்பத்தைப் பிட்டு, ஒன்றுகூடி மன்றாடினர். அவர்களிடம் இருப்பதை அவர்கள் பகிர்ந்து கொண்டனர். அனைத்தும் பொதுவானது என்பதால் எவருக்கும் எதுவும் தேவையில்லாமல் போயிற்று. பொருள் மீது பற்றற்று வாழ்ந்ததால், சுய வசதியை நாடவில்லை. ஒவ்வொருவரின் தேவையும் கவனித்துக் கொள்ளப்பட்டது. இன்று சாதிக்க விரும்பும் சமூக-பொறுப்புணர்வை, அவர்களின் வாழ்க்கைமுறை மிஞ்சி விட்டது.

இயேசுவை நம்புவதால் நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகள் என தமது திருமுகத்தில் யோவான் கூறுகிறார். எனவே கடவுளின் பிள்ளைகள் என்பதால் கடவுளோடு ஒன்றித்திருக்கும் நாம் முழுமையான அன்பிலும் நேர்மையிலும் வாழ வேண்டும். கடவுளின் குடும்பமே ஒரு சமூகம். கடவுளாகிய தந்தையை நேசிப்பது போல் கிறிஸ்துவில் நமது சகோதர-சகோதரிகளையும் நேசிக்க வேண்டும். கடவுளின் பிள்ளைகள் என்பதால் தமது அன்பை எவ்வாறு வெளிக்காட்டப் போகிறோம்? இது ஒரு சவால். அவரது கட்டளைகளைக் கடைப்பிடிப்போம். கடவுளிடமிருந்து பிறந்தவர்களுக்கு அவரது கட்டளை ஒரு பாரமே இல்லை. நாம் விரும்பினால், கடவுளின் அருளில் நாமும் வாழ முடியும். நம்புங்கள்!

**அச்சத்தைத் தவிர்த்து, நம்பிக்கை கொள்ள இயேசு அழைக்கிறார்.** தொடக்கத்தில் ஆதாமிற்குக் கடவுள் உயிர் கொடுத்தார், உயிர்த்தெழுந்த இயேசு நமக்குப் புதுவாழ்வை வழங்கியுள்ளார். புதிய உலகத்தையும் புதிய ஆன்மீக உடலையும் அவர் கொடுத்து, தமது மாட்சியையும் வெற்றியையும் நம்மோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார். திரு அவையின் புதிய மக்கள் நாம். பாவத்தை மன்னிக்கவும் பாவ வாழ்வில் மனிதன் படும் வேதனைகளிலிருந்து புனிதம் பெறவும், கடவுளோடும் அயலாரோடும் ஒன்றித்து வாழ்வதற்கு நிறைவான ஆன்மீக வாழ்வை வழங்கவும் திரு அவைக்கு அருளின் கொடையை கடவுள் பொழிந்துள்ளார்.

**இன்றைய வாசகங்கள்:**

திப 4:32-35;

திபா. 117: 2-4, 15-18, 22-24;

1 யோவான் 5: 1-6;

யோவான் 20: 19-31



*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

11 ஏப்ரல் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு (இறை இரக்கத்தின் ஞாயிறு)

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: எதிர்நோக்கில் உயிர்ப்பு

# ஒரே உள்ளமும் ஒரே உயிரும்

"நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர் திப.4:32)." சிந்தையைத் தூண்டும் அறிக்கை இது. நாம் வாழும் சமூகத்தை நினைத்துப் பார்க்க வைக்கிறது. நீங்களும் நானும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருக்கிறோமா? சொல்வது எளிது, செய்வது கடினம் என சொல்லக்கூடும். ஆனால் முயற்சி செய்து பார்ப்பதில் தவறில்லையே!

